<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் நாள் (19.04.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

<u>மன்றப் பொருள்</u>

1) கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர், திரு.ரா.முருகேசன் அவர்களின் மார்ச் –2018ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.632/2018/சி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **343, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ ஈப்பு வாகனம் TN 57 AS 0817 க்கு 113000 கி.மீ சர்வீஸ் பணிகள் தொகை ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மதுரை கப்பலூர் டி.வி.எஸ் பணி மனையில் மேற்கொள்ள, நகர்மன்றத் தீர்மானம் எண்.321, நாள்.09.02.2018ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பழுது பணிகள் முழுவதும் முடிக்கப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனத்தால் செலவுத் தொகை ரூ.28729/–க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது (பட்டியல் எண். R018M009235, நாள்.14.03.2018). கூடுதல் செலவினம் ரூ.18,729/–ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதி அளிக்கலாம்.
2)பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **344, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதித்து அங்கீகரிக்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சியில் சுங்கநிதியின் கீழ் பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவிலான செய்தித்தாளில் வெளியிட்ட வகையில் தொகை ரூ.7,200/– வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மக்கள் முகம் | 79, நாள்.06.03.2018 | ரூ.7,200/– |

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **345, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

4) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் லெமன்கிராஸ் ஆயில் இருப்பு குறைவாக உள்ளதால் எதிர்வரும் மே மாதம் மலர்க்கண்காட்சி நடைபெறவிருப்பதால் சுற்றலாப் பயணிகளின் வருகை அதிகளவு இருப்பதாலும், நகர்ப் பகுதிகளிலுள்ள பேருந்து நிலையம், பேருந்து நிறுத்தங்கள் சுற்றுலாத் தலங்கள் மற்றும் பொதுக் கழிப்பிடங்களை தொடர்ந்து தூய்மையாக பராமரிக்க வேண்டியிருப்பதால் இதற்கு தேவைப்படும் லெமன் கிராஸ் ஆயில் 400 லிட்டர் வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். இதன் பேரில் லெமன் கிராஸ் ஆயில் 400 லிட்டர் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1051/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **346, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு அடுக்கம் ஊராட்சி எல்லைக்குட்பட்ட சீராடும் கானல் என்ற இடத்தில் சமார் 3.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த உரக்கிடங்கில் நகர்ப்பகுதிகளில் நாள்தோறும் சேகரமாகும் சுமார் 20 மெ.டன் குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. இதனால் இதனருகில் வசித்து வரும் குடியிருப்பு பகுதியின் பொது மக்கள், ஈ தொல்லை மற்றும் துர்நாற்றம் தொடர்ந்து ஏற்படுவதாக புகார் தெரிவித்த வண்ணம் உள்ளனர். மேலும், தொடர்ந்து குப்பைகள் கொட்டப்பட்டு வருவதால் இடப்பற்றாக் குறையும் ஏற்படுவதால் ஈக்கள் உற்பத்தியினை குறைத்து துர்நாற்றம் ஏற்படாமல் குப்பைகளின் அளவை குறைக்க தேவைப்படும் ஈ.எம்.ஐ சொலுசன் வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர் குறிப்பு கொடுத்துள்ளார். இதன் பேரில் 500 லிட்டர் ஈ.எம்.ஐ சொலுசன் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1052/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **347, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

6) இந்நகராட்சி பொதுப் பிரிவில் துப்புரவு பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் கிருமி நாசினிகளான பிளீச்சிங் பவுடர், கருப்பு பினாயில், சென்ட் பினாயில் இருப்பு குறைவாக உள்ளதால் எதிர்வரும் மே மாதம் மலர்க் கண்காட்சி நடைபெறவிருப்பதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகளவு இருப்பதால் நகர்ப் பகுதிகளிலுள்ள சுற்றுலாத் தலங்கள், பொதுக் கழிப்பிடங்களை தொடர்ந்து தூய்மையாக பராமரிக்க வேண்டியிருப்பதாலும், இதற்காக தேவைப்படும் பிளீச்சிங் பவுடர் 6000 கி.கி, கருப்பு பினாயில் 1000 லிட்டர், சென்ட் பினாயில் 200 லிட்டர் மற்றும் சோப் ஆயில் 200 லிட்டர் வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். இதன் பேரில் பிளீச்சிங் பவுடர் 6000 கி.கி, கருப்பு பினாயில் 1000 லிட்டர், சென்ட் பினாயில் 200 லிட்டர் மற்றும் சோப் ஆயில் 200 லிட்டர் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1053/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **348, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) இந்நகராட்சி பொதுப் பிரிவில் பணிபுரியும், துப்புரவுப் பணியாளர்கள் பாதுகாப்பாக துப்புரவு பணியில் ஈடுபட தேவைப்படும் பாதுகாப்பு சாதனங்களான கம்பூட், கையுறை, முகவுறை, தலைக் கவசம் மற்றும் ரிப்ளெக்சன் ஜாக்கெட் 72 துப்புரவுப் பணியாளர்களுக்கு 2017–18ம் ஆண்டிற்கு வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்கள். இதன் பேரில் மேற்கண்ட பாதுகாப்பு சாதனங்கள் வாங்கி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.978/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **349, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சி அலுவலகத்திற்கு எதிரே இந்நகராட்சிக்கு சொந்தமான சிறுவர் பூங்கா உள்ளது. கோடை கால சீசன் தொடங்க உள்ளதால் அதில் மாராமத்து பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எனவே, கொடைக்கானல் ரோட்டரி சங்கம் மூலம் அவர்களது சொந்த செலவில் பராமரித்திட 9.03.2018ம் நாளிட்ட கடிதத்தில் அனுமதி கோரியுள்ளனர். எனவே, இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலகத்திற்கு எதிரே உள்ள சிறுவர் பூங்காவினை கொடைக்கானல் ரோட்டரி சங்கத்தாரின் கோரிக்கையை ஏற்று கொடைக்கானல் ரோட்டரி சங்கத்தின் மூலம் மராமத்து பணிகள் இலவசமாக மேற்கொளவும், தொடர்ந்து பராமரித்துக் கொள்ள அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. அனுமதி அளிக்கலாம்.
2. பராமரிப்பு பணிகள் மேற்கொண்டால் பின் மேற்படி ரோட்டரி சங்கத்திற்கு எவ்வித இழப்பீடும் வழங்க இயலாது என்ற நிபந்தனையுட்ன் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.803/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **350, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகரம் ஓர் சர்வதேச சுற்றுலாத் தலமாகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 21.45 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 36463 ஆகும். இந்நகராட்சியின் உரக்கிடங்கானது நகரிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஒரு நாளைக்கு 20 மெட்ரிக் டன் குப்பைகள் இவ்வுரக்கிடங்கில் கொட்டப்படுகிறது. இந்நகராட்சி பழைய குப்பைக் கிடங்கில் 9000 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்ப்பட்டுள்ளது. புதிய குப்பைக் கிடங்கில் 56250 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டுள்ளது. இக்குப்பைகளை Biomining முறையில் அகற்றிட ரூ.6.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரப்படியான மதிப்பீடு ரூ.6.00 கோடியினை முழுவதும் மானியமாக இந்நகராட்சிக்கு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **351, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

10) இந்நகராட்சி வெள்ளி நீர்வீழ்ச்சி பகுதியில் உள்ள சுங்கச் சாவடியில் மேற்கொள்ளப்படும் வாகன நுழைவு வசூல் பணிக்கு தேவையான ரசீது புத்தகங்கள் ஒரு வருடத்திற்கு வாங்க வேண்டியுள்ளது. மேற்படி ரசீது புத்தகங்களை திண்டுக்கல் மாவட்ட சிறு தொழில் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் இண்ட் எண்.1849 திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்து வாங்கிக் கொள்ளலாம். அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,50,000/– ஆகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரகத்தின் மூலம் சுங்கசாவடி வசூல் நிதியிலிருந்து திரும்ப பெரும் பொருட்டு இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.02/02/அ3).

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **352, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) கொடைக்கானல் நகரம் ஓர் சர்வதேச சுற்றுலாத் தலமாகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 21.45 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 36463 ஆகும். இந்நகராட்சியின் உரக்கிடங்கானது நகரிலிருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. ஒரு நாளைக்கு 20 மெட்ரிக் டன் குப்பைகள் இவ்வுரக்கிடங்கில் கொட்டப்படுகிறது. இதனால் குப்பைகளை உடனுக்குடன் அகற்ற இயலவில்லை. எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட நான்கு பகுதிகளில் நுன் உரக்கிடங்கு (Micro Compost) அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அப்பர் லேக் சாலையில் நுன் உரக்கிடங்கு (Micro Compost) அமைத்தல். | 71.00 |
| 2 | சிவனடி ரோட்டில் நுன் உரக்கிடங்கு (Micro Compost) அமைத்தல். | 71.00 |
| 3 | ஆனந்தகிரி 4வது தெருவில் நுன் உரக்கிடங்கு (Micro Compost) அமைத்தல். | 71.00 |
| 4 | கொய்யா பாறை பகுதியில் நுன் உரக்கிடங்கு (Micro Compost) அமைத்தல். | 71.00 |

மேற்கண்ட விபரப்படியான மதிப்பீடு ரூ.284.00 லட்சத்தினை முழுவதும் மானியமாக இந்நகராட்சிக்கு வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **353, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) இந்நகராட்சி படகு குழாமில் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதற்கு தேவைப்படும் ரூ.20/– மற்றும் ரூ.10/–க்கான ரசீது புத்தகங்கள் இருப்பு குறைவாக உள்ளது. மேற்கண்ட ரசீது புத்தகங்கள் இருப்பு குறைவாக உள்ளது. மேற்கண்ட ரசீது புத்தகங்கள் ரூ.20/–க்கான 100 எண்ணிக்கை கொண்டு ரசீதுகள் (பெரியவர்) 1000 எண்கிக்கையிலான ரசீது புத்தகமும் ரூ.10/–க்கான ரசீதுகள் (சிறியவர்) 100 எண்ணிக்கையிலான ரசீது புத்தகம் கொண்டு 300 எண்ணிக்கையிலான புத்தகங்களும் Dindigul District Printers Service Industrial Co-op Society Ltd., Ind No.4/DGL, 46A Soundararaja Mils Road, Dindigul அச்சகத்தில் அச்சடித்து வாங்கிக் கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.80,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதியுடன் திண்டுக்கல் கூட்டுறவு அச்சகத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **354, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு துப்புரவு பணிக்கு தேவைப்படும் தளவாடச் சாமான்கள் வாங்கி வழங்குவதற்கு நகர்மன்றத் தீர்மான எண்.318, நாள்.09.02.2018ன்படி அனுமதி பெறப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | தளவாடச் சாமான்கள் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் P.சுரேஷ்குமார்– பொருள் 1க்கு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் L.ஜான் எபிநேசர்– பொருள் 1க்கு ரூ. |
|---|---|---|---|
| 1 | கடப்பாறை | ரூ.1160/– | ரூ.1050/– |
| 2 | மண்வெட்டி | ரூ.575/– | ரூ.540/– |
| 3 | கால்வாய் கரண்டி | ரூ.620/– | ரூ.520/– |
| 4 | மூன்று பல் கொத்து | ரூ.410/– | ரூ.380/– |
| 5 | ஐந்து பல் கொத்து | ரூ.870/– | ரூ.810/– |
| 6 | பிக்காஸ் | ரூ.790/– | ரூ.720/– |
| 7 | துடைப்பம் | ரூ.30/– | ரூ.25/– |
| 8 | வீச்சு அரிவாள் | ரூ410/– | ரூ.360/– |
| 9 | புல் அரிவாள் | ரூ.205/– | ரூ.180/– |
| 10 | கையோடு | ரூ.95/– | ரூ.86/– |
| 11 | குந்தாளம் | ரூ.360/– | ரூ.320/– |
| 12 | இரும்பு வாளி | ரூ.320/– | ரூ.270– |
| 13 | மலப்பிரஸ் | ரூ135/– | ரூ.120/– |
| 14 | சுத்தியல் | ரூ.295/– | ரூ.275/– |

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. L.ஜான் எபிநேசர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் எற்கலாம். (ந.க.எண்.301/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **355, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சி பொது நிதி 2017–18ன் கீழ் கொடைக்கானல் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் பராமரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 13899/2016/do2, நாள் 09.03.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்படி பணிக்கு 28.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

1. மாருதி டிரேடிங் கார்ப்பரேஷன், தேனி.
2. யோகேஸ் எலக்ட்ரிக்கல்ஸ், தேனி.

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களில் தொழில்நுட்ப தகுதியை இந்நகராட்சி ஒப்பந்தப்புள்ளி சீராய்வு குழுவினால் 28.03.2018 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில் மாருதி டிரேடிங் கார்ப்பரேஷன் தேனி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்குரிய தொழில்நுட்ப தகுதியினை சீராய்வு குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து 03.04.2018ம் தேதி விலை விகிதம் குறித்தல் ஒப்பந்தப்புள்ளி (Price Bit) திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி தொகை குறியிடப்பட்டுள்ளது.

| பணியின் விபரம் | ஒரு ஆண்டு காலம் பராமரிக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் |
|---|---|---|
| கொடைக்கானல் நகராட்சி சொந்தமான தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 70.37 | மாருதி டிரேடிங் கார்ப்பரேஷன் தேனி. மதிப்பீட்டு ரேட்டை விட 0.06 சதவிகிதம் குறைவாக உள்ளது. |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட மதிப்பீட்டு ரேட்டைவிட **0.06** சதவிகிதம் குறைவாக உள்ளதாலும், கோடைகாலம் தொடங்கிவிட்ட காரணத்தினாலும், பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் அத்தியாவசிய தேவையான தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மதிப்பீட்டு ரேட்டிற்கு குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள மாருதி டிரேடிங் கார்ப்பரேஷன், தேனி நிறுவனத்திற்க்கு பணியினை **3.04.2018** முதல் ஒரு வருட காலம் அல்லது ESCO நிறுவனத்திற்கு ஒப்படைக்கும் வரை அரசு விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளவும் அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) கோடைகாலத்தை முன்னிட்டு எரியாத தெருவிளக்குகளை உடனுக்குடன் சரி செய்து எரியவிட பொது மக்களின் நலன் கருதி அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று **03.04.2018**ல் முதல் பணி செய்திடவும் பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.(ந.க.எண் **3416/2016/இ1**)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **356, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

**15)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு நகர்பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரக்கிடங்கிற்கு எடுத்துச் செல்வதற்கு இரண்டு டம்பர் பிளேசர் லாரிகளும், மூன்று டிப்பர் லாரிகளும் இரண்டு பொலிரோ பிக் அப் மற்றும் நாய்கள் பிடிப்பதற்கு ஒரு டாடா ஏசிஇ என மொத்தம் எட்டு வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இவ்வாகனங்களின் பாதுகாப்பு மற்றும் இயக்கங்களை எளிதில் ஆய்வு செய்யும் பொருட்டு GPS-Vehicle Tracking System – மூலம் கண்காணிக்க வேண்டி துப்புரவு ஆய்வாளர் குறிப்பு கொடுத்துள்ளார். எனவே, பொது சுகாதாரப் பிரிவு எட்டு வாகனங்களுக்கும் GPS-Vehicle Tracking System பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **357, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

**16)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்காக குப்பைகள் அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 9357 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு தகுதிச் சான்றினை புதுப்பிக்க வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண்.**324**, நாள்.**09.02.2018**ன்படி அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணிமனையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சிவபாலாஜி ஆட்டோ மொபைல்ஸ்,<br>**16/3**, மேலக்கால் மெயின் ரோடு, கோச்சடை, மதுரை–**16.** | **ரூ.2,49,537/–** |
| 2 | ஸ்ரீ பாலசுப்ரமணியன் ஆட்டோ கேரேஜ்,<br>**54–A**, பாத்திமா நகர், பைபாஸ் ரோடு, மதுரை–**10.** | **ரூ.2,46,150/–** |

அலுவலக குறிப்பு : **1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீபால சுப்ரமணியன் ஆட்டோகேரேஜ் என்ற பணிமனையின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் எற்கலாம். (ந.க.எண்.**346/2018**/எச்.**1**)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 358, நாள். 19.04.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது. |

*******

17) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகரில் பராரியாய் சுற்றித் திரியும் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கு நகரில் சுற்றித் திரியும் நாய்களை பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 AU 7822 டாடா ஏசிஇ வாகனத்திற்கு தகுதிச் சான்று புதுப்பிக்க பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.325, நாள்.09.02.2018ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணிமனையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சிவபாலாஜி ஆட்டோ மொபைல்ஸ்,<br>16/3, மேலக்கால் மெயின் ரோடு, கோச்சடை, மதுரை–16. | ரூ.64,955/– |
| 2 | ஸ்ரீ பாலசுப்ரமணியன் ஆட்டோ கேரேஜ்,<br>54–A, பாத்திமா நகர், பைபாஸ் ரோடு, மதுரை–10. | ரூ.63,400/– |

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீபால சுப்ரமணியன் ஆட்டோகேரேஜ் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் எற்கலாம். (ந.க.எண்.344/2018/எச்.1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 359, நாள். 19.04.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது. |

*******

18) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 19.12.2012 அன்று அறிவிக்கப்பட்ட கீழ்க்குண்டாறு குடிநீர்த் திட்டத்தினை நகராட்சியால் செயல்படுத்திட, வனத் துறைக்குச் சொந்தமான 0.45 ஹெக்டேர் நிலத்தினை கொடைக்கானல் நகராட்சிக்கு மாற்றம் செய்ய அரசாணை எண்.142, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, நாள்.12.9.2013ன்படி வனத்துறையின் அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி வனத்துறை நிலத்திற்கான கத்தகை தொகையாக கடந்த 2013–2014 முதல் 2017–2018 வரை செலுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர், கொடைக்கானல் அவர்களின் கடிதம் ந.க.எண்.5446/2010/வ1, நாள்.19.3.2018–ன்படி 2018–2019ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.4,36,050/– செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, 2018–2019ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.4,36,050/– (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்து ஆறாயிரத்து ஐம்பது மட்டும்) வனத்துறைக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். (கோப்பு ந.க.எண்.8068/2010/எப்.1)

| நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் : | 360, நாள். 19.04.2018. |
|---|---|
| | |
| நகர் மன்ற தீர்மானம் : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது. |

*******

19) நகராட்சி ஆணையாளர், நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக பணி நிமித்தம் வெளியூர் சென்று வருவதற்கான பயணப்படியாக 2018–2019ம் ஆண்டுக்கு ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அரசின் பயணப்படி விதிகளுக்கு உட்பட்டு பயணப்படி செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3/2006/பி1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **361, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

20) கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிப்பது தொடர்பாக தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள்.15.01.2018ன்படி, நகராட்சிகளில் செயல்படும் அரசுக் கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் (சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டுமென அரசிதழ் வெளியிடப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7234/14/ஆர்1, நாள்.15.03.2018 மூலம் மேற்கண்ட அரசிதழ் மற்றும் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் அறிவுரைகளை கடைபிடித்து, கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரப்படியான விபரங்களை, பொது மக்கள் அறியும் வண்ணம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் செய்தித்தாளில் விளம்பரம் செய்யவும், வரப்பெற்ற அரசிதழினை மன்ற ஒப்புதல் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) நாளிதழில் விளம்பரம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3) செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி கல்வி நிறுவனங்களில் அளவு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.981/2018/அ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **362, நாள். 19.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.

<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் (30.04.2018) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

<u>மன்றப் பொருள்</u>

1) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி கீழ்கண்ட பணிகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஏரிச்சாலையைச் சுற்றியுள்ள நடைபாதையினை சீரமைத்தல். | 10.00 |
| 2 | நகராட்சி படகு குழாமிலிருந்து ஜிம்கானா கிணறு வரை கம்பி வேலி அமைத்தல். | 7.40 |
| 3 | கோக்கர்ஸ்வாக் பகுதியில் உள்ள நடைபாதையினை சீரமைத்தல். | 9.60 |
| 4 | கொடைக்கானல் நகராட்சி படகு குழாமில் கம்பி வேலி அமைத்தல். | 2.10 |
| 5 | C.S.I.Retreat Center முதல் ஏரிச்சாலை வரை கம்பி வேலி அமைத்தல். | 5.00 |
| 6 | ஏரிச்சாலையைச் சுற்றிலும் உள்ள கம்பி வேலிக்கு வர்ணம் பூசுதல். | 8.00 |
| 7 | தலைமை குடிநீர் தேக்கம் மற்றும் ஜிம்கானா கிணற்றிற்கு ஒரு வருடத்திற்கு தேவையான Liquid Chlorine விநியோகம் செய்தல். | 5.00 |

எதிர்வரும் காலம் கோடை காலமென்பதால் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டிய தலையாய கடமை நகராட்சிக்குள்ளது. எனவே, எதிர்வரும் கோடையை சமாளிக்கும் விதமாக மேற்சொன்ன பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் அனுமதி பெற்று குறுகிய கால ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.803/2018/இ1)

| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **363, நாள். 30.04.2018.** |
|---|---|
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) கொடைக்கானல் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017–18ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 23.03.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு அட்டவணை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி 14வது வார்டு தந்தி மேடு பகுதியில் சிறுபாலத்துடன் கூடிய தாங்கு சுவர் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல். | 10.00 | பி.சுப்பிரமணி<br>என்.முருகேஸ்வரி | 0.10% குறைவு<br>0.75% அதிகம் |
| 2 | கொடைக்கானல் நகராட்சி 5வது வார்டில் குறுக்குச் சாலை அமைத்தல் | 5.00 | ஜி.வசந்தகுமார்<br>எம்.ஆர்.பிலால் இப்ராஹிம் | 0.13% குறைவு<br>0.91% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | கொடைக்கானல் நகராட்சி 13வது வார்டு ஆனந்தகிரி 2வது தெரு, ஸ்ரீ பெரியமாரியம்மன் கோவில் அருகில் சமுதாயக் கூடம் கட்டுதல். | 20.00 | ஜி.வசந்தகுமார்<br>எம்.ஆர்.பிலால் இப்ராஹிம் | 0.13% குறைவு<br>0.88% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **364, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு ஏற்கப்படுகிறது.** |

*******

3) கொடைக்கானல் நகராட்சியில் சுங்கநிதியின் தார் சாலை மராமத்து மேற்கொள்ளும் பணிக்கு 23.03.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி பழுதடைந்த சாலைகளான செட்டியார் பார்க் அருகில், வி.ஜி.பி சாலை, கல்லுக்குழி சாலை, பாம்பார்புரம் சாலை, பெய்ரி பால்ஸ் சாலை, சிவனடி ரோடு, அப்பர்லேக் ரோடு மற்றும் ஆனந்தகிரி 1வது தெரு ஆகிய எட்டு (8) சாலைகளை மராமத்து செய்தல் பணி. | 50.00 | M.R.பிலால்இப்ராஹிம்<br>S.E.முகமது ரசூல் | 4.98% அதிகம்<br>7.55% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைவிட 4.98 சதவீதம் அதிகமாக திரு.பிலால் இப்ராஹிம் ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். எனவே விலை குறைப்பு செய்து தரக்கோரி ஒப்பந்ததாரருக்கு கடிதம் வைக்கப் பட்டதில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, மதிப்பீட்டினைவிட 4.98 சதவீதம் அதிகமாக திரு.பிலால் இப்ராஹிம் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மதிப்பீட்டினை விடு கூடுதல் தொகை 4.98 சதவிகிதத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **365, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சியில் 2017–18ம் ஆண்டில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகளை ஓராண்டு சாதனை மலரில் விளம்பரமாக வெளியிட்ட வகையிலும், வளர்ச்சிப் பணிகளை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவிருப்பதை விளம்பரமாக செய்தித்தாளில் வெளியிட்ட வகையிலும் கீழ்கண்ட விபரப்படி தொகை வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | The Daily Thanthi | DGL.1718-0010702, நாள்.24.03.2018 | ரூ.23,625/– |
| 2 | The Daily Thanthi | DGL.1718-0011049, நாள்.24.03.2018 | ரூ.23,625/– |
| 3 | Makkal Kural | MAB 07800954, நாள்.31.3.2018. | ரூ.21,800/– |
| | | மொத்தம் | ரூ.69050/– |

அலுவலக குறிப்பு –        அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **366, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) இந்நகராட்சிக்கு சொந்தமான LED தெருவிளக்குகளில் Automatic Panel Box கான்வென்ட் ரோடு மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய இரண்டு இடங்களில் பழுதடைந்து தெருவிளக்குகள் எரியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட இரண்டு இடங்களிலும், Automatic Panel Box வாங்கி பொருத்திட ரூ.2,10,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –        அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **367, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சிப் பகுதியில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான தமிழ்நாடு ஹோட்டலுக்கு குடிநீர் பற்றாக்குறையின் காரணமாக லாரி மூலம் தங்களது சொந்த பொறுப்பில் குடிநீர் எடுத்துக் கொள்ளவும், அதற்குரிய தொகையினை செலுத்துவதாகவும் தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளது. சுற்றுலாப் பயணிகள் நலன் கருதி கீழ்கண்ட விபரத்திற்கு தொகை செலுத்தி தங்களது சொந்த பொறுப்பில் பாதுகாப்பான முறையில் நடை ஒன்றுக்கு ரூ.300 வீதம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தி இரண்டு மாதங்களுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு நடைகள் மட்டும் குடிநீர் எடுத்துக் கொள்ள ஹோட்டல் தமிழ்நாடு, கொடைக்கானல் அவர்களுக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு –        அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **368, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் அனுமதியற்ற / அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள், ஆக்கிரமிப்புகள் தொடர்பாக கீழ்க்கண்ட வழக்குகள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது. இவ்வழக்குகளை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு T.S.முகமது முகைதீன் அவர்களால் நகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வழக்குகளுக்கு வழக்கு கட்டணமாக ஒவ்வொரு வழக்கிற்கும் ரூ. 7500/– வீதம் தொகை வழங்க கோரி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். இவ்வழக்குகளுக்கான கட்டணத்தினை நகராட்சி நிலை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No. | W.P(MD) No. | Name of the Petitioner | Nature of the case |
|---|---|---|---|
| 1 | 21380/2017 | Lavanya Babu | Deviation Building |
| 2 | 20518/2017 | Veeramani | Deviation Building |
| 3 | 23236/2017 | Jeyapalan | Deviation Building |
| 4 | 23201/2017 | K.C.Abraham | Unauthorized Construction |
| 5 | 22894/2017 | Mahalakshmi Prasath | Deviation Building |

| | | | |
|---|---|---|---|
| 6 | 23088/2017 | Vasudeva Rao | Deviation Building |
| 7 | 23417/2017 | P. Balasubramani | Unauthorized Building |
| 8 | 23811/2017 | T. Ganeshan | Unauthorized Building |
| 9 | 107/2018 | K.P.Duraisamy | Deviation Building |
| 10 | 46/2018 | Eswari | Deviation Building |
| 11 | 9230/2017 | S.E.Sekar | Deviation Building |
| 12 | 21328/2017 | Pathumasethurajan | Deviation Building |
| 13 | 21329/2017 | Amstrange Suthakar | Deviation Building |
| 14 | 23329/2017 | Kodai Internationl School | Deviation Building |
| 15 | 13411/2015 | Yai Anand | Deviation Building |
| 16 | 13412/2015 | Vijay Anand | Deviation Building |
| 17 | 13285/2015 | D.Prabhu | Deviation Building |
| 18 | 13929/2015 | Eswari | Deviation Building |
| 19 | 14039/2015 | Jeyathilagar | Deviation Building |
| 20 | 14650/2015 | A.M.Ansari | Deviation Building |
| 21 | 14400/2016 | Sudhakar | Deviation Building |
| 22 | 15297/2016 | Kasim | Deviation Building |
| 23 | 21796/2016 | Usha Rani | Deviation Building |
| 24 | 23771/2017 | Meena | Deviation Building |
| 25 | 18724/2013 | Kasim | Deviation Building |
| 26 | 21270/2014 | S. Arumugam Indian Club | Deviation Building |
| 27 | 799/2018 | P.Mani | Deviation Building |
| 28 | 860/2018 | Saras | Deviation Building |
| 29 | 899/2018 | Veeramani | Deviation Building |
| 30 | 1041/2018 | Chinnathambi | Deviation Building |
| 31 | 1045/2018 | Abdul Malick | Deviation Building |
| 32 | 1109/2018 | Pream Kumar, Building Society Indian Club | Deviation Building |
| 33 | 1509/2018 | Karthick | Deviation Building |
| 34 | 1506/2018 | S. Arumugam Indian Club | Deviation Building |
| 35 | 914/2018 | Abdul Kani Raja | Master Plan |
| 36 | 1865/2018 | C. Jeyapaul | Deviation Building |
| 37 | 1958/2018 | J. Vasantharajan | Deviation Building |
| 38 | 1229/2018 | E.J. Davish | Deviation Building |
| 39 | 1866/2018 | Lavanya Babu | Deviation Building |
| 40 | 2212/2018 | R.Jayapalan | Unauthorized Construction |
| 41 | 2166/2018 | Gulam Hassan | Unauthorized Construction |
| 42 | 2167/2018 | Mohamed Raffic | Unauthorized Construction |
| 43 | 2259/2018 | S.Saravanaan | Deviation Building |
| 44 | 2257/2018 | G.M.Pathinathan | Unauthorized Construction |
| 45 | 2258/2018 | G.M.Pathinathan | Unauthorized Construction |
| 46 | 2256/2018 | SSB Developers | Deviation Building |
| 47 | 2398/2018 | Vijayan Johnes | Unauthorized Construction |
| 48 | 2405/2018 | R. Kurinji Amalavathy | Deviation Building |
| 49 | 3386/2018 | Boat House | Deviation Building |
| 50 | 3534/2018 | Brindavan School | Unauthorized Construction |
| 51 | 1615/2018 | Indian Club | Deviation Building |
| 52 | 5329/2018 | R.M.Shanmuganathan | Deviation Building |
| 53 | 5808/2018 | Vijayan Johnes | Unauthorized Construction |
| 54 | Cont.p.323/2018 | Daleep Singh Indian Club | Deviation Building |

அலுவலக குறிப்பு.          அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **369, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **1) தீர்ப்பு பெறப்பட்ட வழக்குகளுக்கு உடன் கட்டணங்களை விடுவிக்க அனுமதிக்கப்படுகிறது.<br>2) இதர வழக்குகள் தீர்ப்பு கிடைத்தவுடன் வழக்கு கட்டணமாக விடுவிக்கலாம்.** |

8) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாய மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் சுமார் 40 உள்ளன. இக்கழிப்பிடங்களில் கழிவுகள் நச்சுத் தொட்டிகள் மூலம்

சேகரிக்கப்பட்டுவருகிறது. இவ்வாறு சேகரமாகும் கழிவுகளை அகற்றுவதற்கு நகராட்சியில் கழிவு நீர் வாகனம் இல்லாத காரணத்தினால் கழிவுகளை அப்புறப்படுத்தாமல் இருப்பதால் கழிப்பிடங்களை பொது மக்களும், சற்றுலா பயணிகளும் பயன்படுத்துவதற்கு சிரமமாக உள்ளது. தற்சமயம் கோடை சீசன் துவங்கியுள்ளதால் சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகளவு இருப்பதால் பொதுக்கழிப்பிடங்களில் நச்சுக் கழிவுகளை அகற்ற தகுந்த ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். எனவே, நகராட்சியில் கழிவு நீர் அகற்றும் வாகனம் இல்லாத காரணத்தினாலும், நகரின் தூய்மையை கருத்தில் கொண்டும். ஒப்பந்தப்புள்ளி கோரி நடை கணக்கு அடிப்படையில் (எரிபொருள், ஓட்டுநர் மற்றும் பணியாளர் கூலி உட்பட) கழிவுநீர் வாகனம் அமர்த்தி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1437/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **370, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு குப்பை லாரிகளில் ஏற்பட்ட பழுதுகளை துப்புரவு ஆய்வாளர் திரு.வி.சுப்பையா (வாகனப் பராமரிப்பு) அவர்கள் பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு அவசர அவசியம் கருதி கீழ்கண்ட விபரப்படி தான் சொந்த செலவில் செலவினம் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்து ரூ.23218/–க்கு (ரூபாய் இருபத்தி மூனூறாயிரத்தி இருநூற்றி பதினெட்டு மட்டும்) செலவினப் பட்டியல்கள் சமர்ப்பித்துள்ளார் கீழ்கண்ட பட்யலின்படி உள்ள தொகையை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | செலவின விபரம் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்திற்கு புதிதாக போல்ட் வாங்கி மாற்றியது. | 31.01.2018 | 1040 |
| 2 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகள் சரிபார்ப்பு பணிகள் பார்த்தது. | 15.02.2018 | 2710 |
| 3 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகள் சென்டர் போல்ட் கழற்றி மாற்றியது. | 19.02.2018 | 850 |
| 4 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகள் கட்டு கழற்றி மாற்றியது. | 28.02.2018 | 600 |
| 5 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்திற்கு கியர் பாக்ஸ் சர்வீஸ் பழுதுப் பணிகள் கழற்றி மாற்றியது. | 18.03.2018 | 2300 |
| 6 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்திற்கு பேக்வீல் இரண்டு கழற்றி சிலிண்ட மாற்றி லைனில் மாற்றியது. | 31.03.2018 | 850 |
| 7 | டி என் 57 ஏயு 3416 வாகனத்திற்கு ஏற்பட்ட பழுதுகளுக்கு ஸ்பேர்பார்ட்ஸ் வாங்கி பொருத்தப்பட்டது (1600+570) | 03.04.2018 | 2170 |
| 8 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்தில் ஏற்பட்ட பழுதுகளுக்கு ஸ்பேர்பார்ட்ஸ் வாங்கி பொருத்தப்பட்டது (450+485) | 14.04.2018 | 935 |
| 9 | டி என் 57 டபிள்யு 4937 வாகனத்திற்கு வத்தலக்குண்டு RTO அலுவலகத்தில் FC எடுத்த வகையில் (800+50) | 20.04.2018 | 850 |
| 10 | டி என் 57 டபிள்யு 4937 வாகனத்திற்கு வத்தலக்குண்டு RTO அலுவலகத்தில் FC எடுத்த வகையில் (510+5) | 20.04.2018 | 515 |
| 11 | டி என் 57 டபிள்யு 4937 வாகனத்திற்கு வத்தலக்குண்டு RTO அலுவலகத்தில் TEDI Electronic Speed Goernor பொருத்தியது Structure பொருத்தியது Polution சான்று பெறப்பட்டது. | 20.04.2018 | 5550 |
| 12 | டி என் 57 டபிள்யு 4937 வாகனத்திற்கு FC பணிக்காக வத்தலக்குண்டு TRO அலுவலகத்தில் Road Tax, Green Tax சாலை வரி பசுமைவரி செலுத்தியது. | 20.04.2018 | 3848 |
| 13 | டி என் 57 டபிள்யு 9634 வாகனத்திற்கு FC பணிக்காக RTO அலுவலகத்தில் இருந்து FC பெறப்பட்டு வந்தபோது ஊத்து என்ற இடத்தில் உள்ள Petrol Bunk ல் 14 லிட்டர் டீசல் போடப்பட்டது. | 20.04.2018 | 1000 |
| | | மொத்தம் | **23218** |

அலுவலக குறிப்பு – 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகரின் தூய்மையினை கருத்தில் கொண்டு செலவினம் மேற்கொண்டமையை மன்றம் அனுமதிக்கலாம்.
3) இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் அன்னாருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **371, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.<br>தணிக்கைத் தடைகள் / ஆட்சேபனைகளுக்கு தனியரை பொருப்பாக்கலாம்.** |

*******

10) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி படகு குழாம் எதிரில் உள்ள சிறுவர் பூங்காவில் சேகரமாகும் குப்பைகளை அங்கேயே உரம் தயாரிக்க (Micro Compost) ரூ.1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **372, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

11) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான படகு குழாமில் 7 துடுப்புப் படகுகள் மற்றும் 10 மிதி படகுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் படகு சவாரி செய்வதற்கு Life Jacket கள் பாதுகாப்பு நலன் கருதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இருப்பில் உள்ள Life Jacket கள் கிழிந்தும், பயன்படுத்த இயலாத நிலையிலும் உள்ளன. இவற்றை பயன்படுத்த சுற்றுலாப் பயணிகள் முன்வருவதில்லை. எனவே, புதிய Life Jacket கள் 100 எண்ணம் ரூ.1,51,000/– மதிப்பீட்டில் வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **373, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

12) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி கொடைக்கானல் படகு குழாமில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதனடிப்படையில் ரூ. 1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **374, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

13) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி பிரையண்ட் பூங்கா முன்புறம் உள்ள நகராட்சி சாலைகளை மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதனடிப்படையில் ரூ.9.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **375, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

14) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான 10 தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதனடிப்படையில் ரூ. 2.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **376, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

15) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி நகர் பகுதியில் 10 இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. அதனடிப்படையில் ரூ. 4.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **377, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

16) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி ஏழு ரோடு சந்திப்பு முதல் அண்ணாசாலை வரை உள்ள நடைபாதை கம்பி வேலி மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதனடிப்படையில் ரூ. 2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு

அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **378, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

17) கொடைக்கானல் நகராட்சி மலை பகுதியாக இருப்பதாலும், அவ்வப்பெழுது பருவமழையினாலும் மரங்கள் விழுந்து பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படுகிறது. அதை உடனுக்குடன் அப்புறப்படுத்திட இந்நகராட்சிக்கு மின்மரஅருவை இயந்திரம் (Power Saw) 2 எண்ணம் வாங்கிக்கொள்ள ரூ.1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **379, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

18) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான டர்னர்புரம் கீழ்பகுதியில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தின் பின்பகுதி மற்றும் முன்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்திட ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **380, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

19) மலைகளின் இளவரசி என்றழைக்கப்படும் கொடைக்கானல் நகராட்சி ஓர் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். இங்கு ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது கோடைகால சீசன் தொடங்கிவிட்டதால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி பெர்ன்ஹில் சாலை, கோகினூர் பங்களா சாலை மற்றும் கால்டன் ஹோட்டல் சாலைகளை மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதனடிப்படையில் ரூ. 7.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதியும் மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **381, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

20) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்கு குப்பைகள் அகற்றப் பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 W 4937 டிப்பர் லாரி வாகனத்தின் ஆறு டயர்களும் தேய்ந்து வாகனத்தை இயக்க சிரமமாக உள்ளதாக துப்புரவு ஆய்வாளர் (வாகனப் பொறுப்பு) குறிப்பு அளித்துள்ளார்கள். இதன் பேரில் துப்புரவு பணி சுணக்கமின்றி நடைபெற ஆறு எண்ணம் டயர்கள் MRF கம்பெனி மூலம் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.75,000/–க்கு (ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1565/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **382, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

21) இந்நகராட்சி 21.45 ச.கி.மீ பரப்பளவு கொண்ட 24 வார்டுகளை உள்ளடக்கிய நகரமாகும். சாலைகளின் நீளம் 65கி.மீ மற்றும் 100க்கும் மேற்பட்ட தெருக்கள் உள்ளன. சாலைகள் மற்றும் தெருவோரங்களில் வளரும் புதர்ச் செடிகளை அகற்றுவதற்கு புல் வெட்டும் இயந்திரங்கள் வாங்கி வழங்க வேண்டுமென குறிப்பு அளித்துள்ளார்கள். இதன் பேரில் மூன்று புல் வெட்டும் இயந்திரங்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1563/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **383, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

22) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிக்காக குப்பைகள் அகற்றும் மூன்று டிப்பர் லாரிகள் பயன்பாட்டில் உள்ளன. இந்த லாரிகள் மூலமாக நகர்ப்பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அன்றாடம் உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. இவ்வாறு லாரிகள் மூலமாக குப்பைகள் எடுத்துச் செல்லும் போது சாலைகளில் சிதறி சுகாதாரக்கேடு ஏற்படுவதாக தொடர்ந்து பொது மக்களிடமிருந்து அலைபேசி மற்றும் வாட்ஸ ஆப் செய்தி மூலமாக புகார் வந்தவண்ணம் உள்ளது. எனவே, குப்பைகளை சிதறாமல் நைலான்வலை கொண்டு மூடி எடுத்துச் செல்ல மூன்று நைலான் வலைகள் வாங்கி வழங்க வேண்டுமென துப்புரவு ஆய்வாளர் (வாகன பொறுப்பு) குறிப்பு அளித்துள்ளார்கள். எனவே, மூன்று எண்ணம் நைலான் வலைகள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,30,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1562/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **384, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

23) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகர்பகுதியிலுள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் இதர பகுதிகளிலிருந்து சேகரமாகும் குப்பைகளை துப்புரவு பணியாளர்கள் மூலமாக சேகரிக்கப்பட்டு உரக்கிடங்கில் சேர்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சேகரமாகும் குப்பைகளை தரப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலக வாட்ஸ் ஆப் செய்தி மூலமாக அறிவுறுத்தியதால் அதன் பேரில் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கிரீன்லிங்க் அனலைட்டிக்கல் அன்ட் ரிசர்ச் லேபரேட்டரி இந்தியா (பி) லிட்., கோயமுத்தூர் என்ற நிறுவனம் தர பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை பெற்று அதற்கான கட்டணத் தொகை ரூ.15,222/– (ரூபாய் பதினைந்தாயிரத்து இருநூற்றி இருபத்தி இரண்டு மட்டும்) வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1561/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **385, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

24) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் 72 துப்புரவுப் பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டிற்கான பாதுகாப்பு சாதனங்களான தலைக் கவசம், முகக் கவசம், கையுறை, ரெப்ளக்சன் ஜாக்கெட் மற்றும் கம்பூட் வாங்கி வழங்க வேண்டி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்கள். இதன் பேரில் பாதுகாப்பு சாதனங்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1564/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **386, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

25) கொடைக்கானல் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவிலான செய்தித் தாளில் வெளியிட்ட வகையில் தொகை ரூ.12,600/– (ரூபாய் பனிரெண்டாயிரத்து ஆறுநூரு மட்டும்) வழங்கக் கோரி மக்கள் குரல் நாளிதழ் பட்டியல் எண். MAB 070800888, நாள்.06.03.2018 வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **387, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதி அளிக்கப்படுகிறது.** |

*******

26) இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் நகர்பகுதிகளில் அன்றாடம் உருவாகும் சுமார் 20 மெ.டன் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதனால் அருகில் குடியிருப்பவர்களிடமிருந்து தொடர்ந்து அலைபேசி செய்தி வாயிலாகவும், நேரடியாகவும் துர்நாற்றம் வீசுவதாக புகார் வந்த வண்ணம் உள்ளன. எனவே, உரக்கிடங்கில் உருவாகும் துர்நாற்றம் மற்றும் குப்பைகளின் அளவை குறைப்பதற்காக EMI சொலுசன் வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர் குறிப்பு கொடுத்துள்ளார். இதன் பேரில் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட் கோ சர்வ், திருச்சி நிறுவனம் மூலம் ஒரு லிட்டர் ரூ.972/– வீதம் (வரிகள் உட்பட) 500 லிட்டர் வாங்கி வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.4,86,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்தாறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.308/2014/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **388, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

27) இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகர்பகுதியிலுள்ள குடியிருப்புகள் , வணிக வளாகங்கள் மற்றும் இதர பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை தரம் வாரியாக பிரித்து தனி நபர் உருவாக்கும் குப்பைகளில் மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பைகளை எடைபோட்டு நாள்தோறும் உருவாகும் குப்பைகளை கணக்கீடு செய்ய வேண்டுமென நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலக வாட்ஸ் ஆப் செய்தியில் அறிவுறுத்தியுள்ளதால் குப்பைகளை எடை போடுவதற்கு மூன்று எண்ணம் எலக்ட்ரானிக் தராசுகள் வாங்கி வழங்குமாறு துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு அளித்துள்ளார்கள். இதன் பேரில் மூன்று எண்ணம் எலக்ட்ரானிக் தராசுகள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.11,500/–க்கு (ரூபாய் பதினோறாயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2651/2015/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **389, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

*******

28) கொடைக்கானல் நகராட்சியில் 2017–18ம் ஆண்டில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகளை ஓராண்டு சாதனை மலரில் விளம்பரமாக வெளியிட்ட வகையிலும், எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிற்கு இந்நகராட்சி வளர்ச்சிப் பணிகளை விளம்பரமாக செய்தித்தாளில் வெளியிட்ட வகையிலும் கீழ்கண்ட விபரப்படி தொகை வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல்படி தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலை தமிழகம் | MT-0446/2018-19, நாள்.2.04.2018 | ரூ.25,200/– |
| 2 | KAL Publications (P) Ltd, (தினகரன்) | 3300044586, நாள்.31.12.2017 | ரூ.16,830/– |
| | | மொத்தம் | ரூ.42,030/– |

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **390, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

29) கொடைக்கானல் நகராட்சி சுங்கநிதி 2015–16ன் கீழ் 12 பணிகள் மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.8913/2015/ஊ.வ.8, நாள்.04.01.2016ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | பாக்கியபுரம் மேல் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4.98 |
| 2 | பர்ன்ஹில் ரோடு விநாயகர் கோவில் பகுதியில் சிமெண்ட் சாலை மற்றும் டிப்போ எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் மழைநீர் வாய்க்கால் மூடி அமைத்தல். | 4.95 |
| 3 | எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் சிறு பாலம் மற்றும் குறிஞ்சி ஆண்டவர் கோவில் பகுதியில் பேவர் பிளாக் பதித்தல், செட்டியார் பார்க் மற்றும் நேதாஜி நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 9.92 |
| 4 | சீனிவாசபுரம் முதல் கார்மேல்புரம் வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 4.98 |
| 5 | அண்ணாநகர் பகுதியில் தடுப்புச் சுவர் மற்றும் மழை நீர் வாய்க்கால் அமைத்தல், அண்ணாநகர் 3வது தெருவில் பேவர் பிளாக் தளம் அமைத்தல். | 9.94 |
| 6 | பெய்ரி பால்ஸ் ரோட்டில் சிமெண்ட் சாலை மற்றும் சிறு பாலம் அமைத்தல், மேல் புதுக்காட்டில் சிமெண்ட் சாலை அமைத்தல். | 9.94 |
| 7 | செல்லபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் அமைத்தல். | 4.98 |
| 8 | கால்ப் கிளப் சந்திப்பு முதல் மைக்ரோ ஸ்டேசன் வரை தார் சாலை அமைத்தல், பாம்பார்புரம் பகுதியில் தடுப்புச் சுவர் மற்றும் சிறு பாலம் அமைத்தல். | 9.92 |
| 9 | பிளிஸ்வில்லா தெருவில் செல்வி வீடு முதல் பாலு வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 4.99 |
| 10 | இருதய ஆண்டவர் கோயில் செல்லும் சாலையில் தடுப்புச் சுவர் அமைத்தல். | 6.62 |
| 11 | பிரையண்ட் பார்க் அண்ணா சிலைக்கு அலங்கார கம்பி வேலி அமைத்தல். | 9.98 |
| 12 | வார்டு எண் 23.ல் உகார்தேநகர் பகுதியில் சிமிண்ட் சாலை மற்றும் தாங்கு சுவர் அமைத்தல். | 9.90 |

அதன்படி பணிகளை மேற்கொள்வதற்கு 10.02.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத் தீர்மானம் எண்.1527, நாள்.25.02.2016ல் ஏற்கப்பட்டு, 04.03.2016 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. இதில் வரிசை எண்.7ல் உள்ள செல்லபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எல்.ஜான் எபிநேசர் என்பவரின் ஒப்பந்தப்பதிவை ரத்த செய்து விட்டதால் மேற்படி பணிக்கு பதிலாக பார்க் வியூ பங்களா (மாவட்ட ஆட்சித்தலைவரின் முகாம் அலுவலகம்) மற்றும் ஆணையாளர் குடியிருப்பு பகுதியில் தாங்கு சுவர் அமைக்கும் பணியினை அதே மதிப்பீட்டில் சுங்க நிதியின் கீழ் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி அளிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **391, நாள். 30.04.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.